**கடுவல மாநகர சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கடுவல மாநகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபைகள் சட்டத்தின் (252 அதிகாரம்) 219 ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடுவல மாநகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுக் நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி மன்றங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மாநகர சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 உள்ளூராட்சி மன்றங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை.**

| குறித்த நியமங்களுடன் தொடர்புடனான இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உள்ளூராட்சி மன்றங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 2017 இன் 11.10 இன் பிரகாரம் குடிநீர் வழங்கும் போது வீதிகளுக்கு சேதங்களை ஏற்படுத்துவதற்காக செலுத்த வேண்டிய இழப்பீட்டுதொகைகளுக்குரிய நிகழத்தக்க பொறுப்பு தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை | நிகழத்தக்க பொறுப்பு தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

**1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் ஒழுங்கைகள், மதகுகள், பாலங்களின் பெறுமதியில் ரூபா 740,627 பெறுமதியான கட்டிடங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை | கட்டிடங்களின் பெறுமதி கட்டிடங்கள் கணக்கிற்கு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் இயந்திரங்களின் பெறுமதி ரூபா 1,391,530 ஆக இருந்த போதும் நிதிக் கூற்றுக்களில் ரூபா 2,089,221 என கணக்கீடு செய்யப்பட்ட காரணத்தால் ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 697,691 குறைத்தும் நிர்வாகச் செலவினம் ரூபா 697,691 ஆல் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வின் விடயங்களுடன் இணங்கவில்லை. ரூபா 216,800 என 2020 ஆம் ஆண்டிற்குரிய இயந்திர உபகரணங்களின் ஆரம்ப மீதிகளின் பெறுமானத்தின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட வருடாந்த பெறுமதியாகும். அது கழிக்கப்படாமல் சேர்க்கப்பட்ட பெறுமதியாகும். (4,336,000x5% -216,800) 2021 ஜனவரி 01 இல் உள்ளவாறு இயந்திரங்களின் பெறுமதி ரூபா 28,047,396.70 ஆகும். மீளாய்வாண்டின் இயந்திரங்களின் பெறுமானத்தேய்வு பெறுமதி கணக்கினைத் தயாரிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டிருந்த கணக்கீட்டுக் நியமத்தின் பிரகாரம் சரியாகக் கணக்கிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2021.12.31 முடிவடைந்த ஆண்டிற்காக இயந்திரத்தின் மீது பெறுமானத்தின் பெறுமதி ரூபா 2,089,221 ஆகும். | இயந்திரங்களின் பெறுமானத்தின் பெறுமதி கணக்கிடும் போது அது சரியாக கணக்கிடப்பட வேண்டும் |
| (இ) | பரிமாற்றல் கொடுக்கல் வாங்கல்களுக்கான செலவினம் ரூபா 2,925,571 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்வரும் காலத்தில் பதில் அளிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சரியாகக் கணக்கிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் நீண்ட கால கடன்களில் நடைமுறை பங்கு உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்திற்கான மீதி ரூபா 5,450,303 ஆக இருந்த போதும் நிதிக் கூற்றுக்களில் அது ரூபா 4,158,730 என காண்பிக்கப்பட்ட காரணத்தினால் குறுங்கால செலுத்த வேண்டிய கடனும் ரூபா 1,291,573 ஆல் குறைத்தும் நீண்ட கால கடன் அப்பெறுமானத்தால் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | இணங்குகிறேன். கணக்கிடும் போது இடம்பெற்ற தவறினை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நீண்ட கால கடன்களில் நடைமுறைப் பங்கு குறுங்காலத்தில் செலுத்த வேண்டியவையாக பதிவு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 முடிவடைந்த திகதியஜல் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த ரூபா 21,532,320 ஆன 2 கட்டிடங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் முடிவுறாத கட்டிடங்களாக காண்பிக்கப் பட்டமையால் அப் பெறுமானத்தால் கட்டிடங்களின் பெறுமதி குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | இணங்குகிறேன். இவ்விடயத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த உள்நாட்டு உணவகம் - கடுவள மற்றும் கடுவள நூலகத்தின் முன்னால் உள்ள கட்டிடங்கள் போன்ற இடங்கள் தொடர்பாக அவற்றின் 2021.12.31 ஆம் திகதியின் நிலைமை மற்றும் அதற்குரிய கிரய பெறுமதிகள் குறிப்பிடப்பட்டு தகவல்களைச் சமர்ப்பிக்குமாறு மீண்டும் மாநகர பொறியியலாளருக்கு கடிதம் ஒன்று மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பாக அப்பதில் கடிதத்தின் பிரகாரம் எதிர்வரும் காலத்தில் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத்தருகிறேன். | வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட கட்டிடங்களின் கிரயப் பெறுமதி கட்டிடங்களின் பெறுமானத்திற்கு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்தப்பட வேண்டிய நானாவிதக் கடன்கொடுப்போராக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 2,575,900 ஆன மூலதன செலவின வகைகள் 2 மீண்டெழும் செலவினமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | உயிரியல் வாயுவின் பிறப்பாக்கி தொடர்பான தவறுகள் மற்றும் 19 அங்குள்ள LED மொனிடர்கள் 03 தொடர்பாக தவறுடன் இணங்குகிறேன். அதன் பிரகாரம் இத்தவறுகள் 07 மற்றும் 08 ஆம் இலக்க நாட்குறிப்புக்கள் மூலம் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மூலதனச் செலவினம் சரியாக மூலதனமாக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (எ) | களஞ்சிய பேரேட்டின் பிரகாரம் இருப்புப் பெறுமதி ரூபா 596,456 குறைத்து பதிவு செய்யப்பட்டிருந்தது. | எதிர்வரும் காலத்தில், பதில் அளிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | களஞ்சிய இருப்பு மீதி சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஏ) | ரூபா 5,684,705 பெறுமதியான ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரண உருப்படிகளில் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் சபையின் இருப்பில் காணப்பட்டமை காரணமாக ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள் அந்த அளவினால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் காலத்தில், பதில் அளிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீது சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.3 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் 05 கணக்குப் விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களில் காணப்பட்ட மீதிகள் மற்றும் அட்டவணைகளின் பிரகாரம் பெறுமதிகளுக்கு இடையே ரூபா. 20,116,544 வேறுபாடு காணப்பட்டது | • நடப்பாண்டினுள் அந்த வருமானம் மூலதனமாக்கப்பட்டு நிலையான வைப்பின் கீழ் நாட்குறிப்பு பதிவு மூலம் சீராக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டது.<br>• எதிர்காலத்தில் பதில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன்.<br>• தவறுகள் 2022 இல் 03 மற்றும் 04 ஆம் இலக்க நாட்குறிப்பு பதிவுகள் மூலம் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br>• ஊழியர் கடன் விடயத்தின் மூலம் இறுதிக் கணக்கிற்கு வழங்கப்பட்ட அட்டவணை மற்றும் 2021.12.31 இல் உள்ளவாறு ஊழியர் கடன் கணக்கு மீதியுடன் வேறுபாடொன்று இல்லையென அறியத்தருகிறேன்.<br>• தவறு திருத்தலாக 2022 இல் 09 ஆம் இலக்க நாட்குறிப்பின் மூலம் மேற்கொள்ளப்பட்டது. பத்தரமுல்லை மாவட்ட அலுவலக வேறுபாட்டிற்கான காரணம் விசாரிக்கப்பட்டுள்ளதுடன் அவ்விடயத்தின் பிரகாரம் சரியாக்குவதற்கு எதிர் காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக அறியத்தருக்கிறேன். | ஆண்டின் இறுதியில் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதி மற்றும் அட்டவணையின் பிரகாரம் மீதி சமமாக இருக்க வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) மாநகர கட்டளைச் சட்டம் | | | |
| 252 அதிகாரமான மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 136 ஆ (1) ஆம் பிரிவு | 2/243 ஆம் இலக்கக் காணியில் ஆபத்தான மரங்களை அகற்றுவதற்காக 05 முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதும் அபாயகரமான | 2022.06.02 ஆம் திகதி கடவள மாநகர சபையில் மாநகர முதல்வருடன் கலந்துரையாடல் ஒன்று நடத்தப்பட்டதுடன் அதன்போது இணங்கப்பட்ட பிரகாரம் 2022.06.28 ஆம் திகதிக்கு முன்னர் இந்த | மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மரங்கள் அகற்றப்பட்டிருக்கவில்லை. | பிரச்சனைக்கு காணியில் காணப்படும் அனைத்து அபாயகரமான மரங்களையும் அகற்றுவதற்கும் குறித்த தரப்பினர் அறிவுறுத்தப்பட்டிருந்தனர். 2022.06.28 இற்கு உட்பட்ட காலப் பகுதியில் அண்மித்த உரிமையாளர்கள் உடமை, உயிர்கள், ஆதனங்கள் மற்றும் ஏதேனும் ஒரு வகையில் அவற்றுக்கு சேதம் இடம் பெற்றிருந்தால் அப்பொறுப்பை காணியின் உரிமையாளர் ஏற்க வேண்டும் என கட்டளையிடப்பட்டது. | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 371 (5) | வழங்கப்பட்ட முற்பணம் வழங்கப்பட்ட நிதியாண்டின் திசெம்பர் 31 இற்கு முன்னர் தீர்வுசெய்யப்பட வேண்டிய போதிலும் தொடர்ந்தும் தீர்வுசெய்யப்படாத முற்பண மீதிகளை தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவ்வாறு இணங்காணப்படாத தீர்வு செய்யப்படாத முற்பணத்தொகையில் இனங்காணப்பட்ட முற்பணத்துக்காக உரிய நாட்குறிப்புப் பதிவு 08 சீராக்கப்பட்டதுடன் எஞ்சிய மீதியான ரூபா 193,544 ஆன தொகை இதுவரை இனங்காண்பதற்கு முடியாதிருந்தது. அம்மீதி எதிர்காலத்தின் போது இனங்காணப்பட்டு சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறியத்தருகிறேன். | இம்மீதி இனங் காணப்பட்டு தீர்வு செய்வதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 396 | வங்கி இணக்கக் கூற்றின் பிரகாரம் 06 மாதங்களுக்கு மிகைத்த வழங்கப்பட்ட போதும் கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்படாத ரூபா 233,661 ஆன 36 காசோலைகள் இருந்ததுடன் அது தொடர்பாக நிதிப்பிரமாணம் | மீளாய்வாண்டின் திசெம்பர் மாதம் வங்கி இணக்கக் கூற்றின் பிரகாரம் 06 மாதங்களை மிகைத்த வழங்கப்பட்ட போதும் கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்படாத ரூபா 233,661 பெறுமதியான காசோலைகள் 36 | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 396 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இருந்தன. | |
| (iii) | நிதிப் பிரமாணம் 396 | வங்கிக் கூற்றின் பிரகாரம் 06 மாதங்களைக் கடந்த வைப்பு செய்யப்பட்ட போதும் தீர்வையாகாத 06 காசோலைகள் அவதானிக்கப்பட்டதுடன் அக்காசோலைகள் தொடர்பாக நாளாந்த பெறுவனவு அறிக்கை வேறுபாடு தொடர்பாகவும் ஆராய்ந்து உரிய நடைமுறைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 676355 ஆம் இலக்க காசோலை மற்றும் 288943 ஆம் இலக்க காசோலைகள் சிகாஸ் மென்பொருளின் தவறொன்றின் மீது இரண்டு முறை அப்பெறுமதி வருமானத்திற்கு உட்பட்டுள்ளதாக பத்தரமுல்ல மாவட்ட அலுவலகத்தின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. எதிர்காலத்தில் அத்தவறை சீராக்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதாகவும் ஏனைய தீர்வையாகாத பெறுமதி தொடர்பாக பிரதான அலுவலகம் கடுவள பத்தரமுல்ல அத்துருகிரிய மாவட்ட அலுவலகங்கள் அவ்வப்போது அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன் அது தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எதிர்வரும் வங்கிக் கணக்கிணக்க கூற்றுக்களில் சீராக்குவதாக | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 1/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை 9(1)(ஆ) பந்தி | ஏதேனும் விசேட செயற் பாடொன்றிற்காக பதவிநிலை உத்தியோகத்தருக்கு மாத்திரம் ஒரு சந்தர்ப்பத்தில் ரூபா 100,000 ஆன கூடிய செயல்நிமித்த கட்டுநிதி வழங்கப்படக் கூடியதாக இருந்த போதும் அந்த எல்லையை மிகைத்து ரூபா 1,640,939 தொகை 07 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது. | சபையின் தேவைப்பாட்டை நிறைவேற்றுவதற்காக மேலே குறிப்பிட்ட அங்கீகாரத்தின் கீழ் ரூபா 100,000 ஐ மிகைத்து செயல்நிமித்த கட்டுநிதி வழங்கப்பட்டதாக அறியத்தருகிறேன். | அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும |

## 2 நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவீனத்தை விஞ்சிய வருமானம் ரூபா 622,069,391 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 294,584,222 ஆக இருந்தது.

## 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மக்கள் வங்கியின் கணக்கு இலக்கம் 196-1001-6-3869561 ஆம் இலக்க நடைமுறை கணக்கில் நீண்ட காலமாக செயற்பாடற்று இருந்ததுடன் அக்கணக்கில் காணப்படும் ரூபா 14,124 ஆன மீதியொன்று இனங்காணப்பட்டு தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | இனங்காணப்படாத கொடுப்பனவு பெறுமதியான ரூபா 14,124 தொகையை எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத்தருகிறேன். | நீண்ட காலமாக செயலற்றுக் காணப்படும் மீதிகளை இனங்காணப்பட்டு தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

(அ) **நிலுவை வீத வரி**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | வீதவரி<br>மீளாய்வாண்டின் இறுதி திகதியில் நிலுவை வீதவரி மீதி ரூபா 80,204,165 ஆக இருந்ததுடன் அதில் 03 ஆண்டுகளுக்கும் 10 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக அறவிடப்பட வேண்டிய ரூபா 16,478,833 ஆன நிலுவையும் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 3,193,208 ஆன நிலுவை மீதியாக இருந்ததுடன் அது 2022 ஏப்ரல் 08 கணக்காய்வுத் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் பதிலளிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிலுவை வீதவரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | **வினோத வரி**<br>மீளாய்வாண்டினட இறுதித் திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய | எதிர்காலத்தில் பதிலளிப்பதற்கு | நிலுவை விநோத வரியை விரைவில் |

| | | | |
|---|---|---|---|
| | களியாட்ட வரியின் பெறுமதி ரூபா 7,009,015 ஆக இருந்ததுடன் அதில் 03 ஆண்டுகளுக்கு மேல் அறவிடப்பட வேண்டிய ரூபா 3,191,249 உள்ளடக்கப்பட்டிருந்தது. | நடவடிக்ககை எடுப்பேன். | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(இ)** | **வாரச்சந்தை வரி** | | |
| | மீளாய்வாண்டுக்காக அறவிடப்பட வேண்டிய வாரச்சந்தை கட்டணங்கள் ரூபா 368,126 ஆக இருந்ததுடன் அம்மீதி 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்பட வேண்டி காணப்பட்டது. | கடுவெல வாரச்சந்தை நிலுவைத் தொகை ரூபா 368,126 என குறிப்பிடப்பட்டுள்ள தொகை 2012 ஆம் ஆண்டில் காணப்பட்ட நிலுவையாகும். இந்நிலுவைத் தொகை தொடர்பாக கணக்குகள் குழுவின் பரிந்துரையின் படி உள்ளூராட்சி மன்றத் திணைக்களத்திடமிருந்து மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் அறிக்கை எனக்கு கிடைத்த பின்னர் உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் ஆலோசனையின் அடிப்படையில் தேவையான நடவடிக்கை எடுப்பேன். | அறவிடப்பட வேண்டிய வாரச்சந்தை வரியை விரைவில் அறவிடவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| **(ஈ)** | **முத்திரைக் கட்டணங்களும் நீதிமன்றத் தண்டப்பணமும்** | | |
| | மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் மீளாய்வாண்டிற்காக பெற வேண்டிய ரூபா. 3,000,000 ஆன நீதிமன்றத் தண்டப்பணமும் ரூபா. 699,939,000 ஆன முத்திரைக் கட்டணங்களும் காணப்பட்டன. 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது மதிப்பிடப்பட்ட முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 700,000,000 ஆக இருந்த போதும் அவ்வாண்டுகளின் போது ரூபா 2,888,420 மற்றும் ரூபா 61,000 மாத்திரமே கிடைத்திருந்தது. அவ்வாறே 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா 3,000,000 வீதம் மதிப்பிடப்பட்டிருந்த போதும் 2016 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டின் இறுதி வரை நீதிமன்றத் தண்டப்பணம் | முத்திரைக் கட்டண வருமானம் நடப்பாண்டில் கிடைக்காதிருந்ததுடன் காணி பதிவாளர் நாயகத்திடம் பதிவாளர் அலுவலகத்திலிருந்து அவற்றின் பிரதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு அடுத்த ஆண்டிலேயே அனுமதி கிடைக்கின்றது.<br><br>எவ்வாறாயினும் இது வரை பின்வருமாறு முத்திரைக் வருமானப் பிரதிகள் எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக மேலும் அறியத் தருகிறேன்.<br><br>நீதிமன்ற தண்டப்பண வருமானம் பெற்றுக் கொள்வதற்கு | பெற வேண்டிய முத்திரைக் கட்டண வருமானதத்தை நிலுவை இல்லாமல் சபைக்கு பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| கிடைத்திருக்கவில்லை. அவ்வாறே இந்த நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள் வருமானத்தைப் பெற்றுக் கொள்வதற்காக குறித்த நிறுவனங்களுக்கு அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படாது இருந்ததாகவும் அவதானிக்கப்பட்டது. | அட்டவணைகளை சமர்ப்பிப்பது தாமதம் ஏற்பட்டு இருந்தமை நீதிமன்ற உத்தியோகத்தர்கள் மற்றும் காணப்பட்ட தெளிவு அடிப்படையில் உருவாகியிருந்த சிக்கல்கள் காரணமாகும். தற்போது இச்சிக்கல்கள் தீர்வு செய்யப்பட்டு 2018 ஆம் ஆண்டின் தண்டப்பணம் தொடர்பாக தகவல்களை பிரதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 இல் அபாயகரமான மரங்கள் தொடர்பான பொது முறைப்பாடுகள் அத்துமீறிய நிர்மாணம் தொடர்பான முறைப்பாடுகள் மற்றும் மின்சார முறைப்பாடுகளாக மொத்தம் 603 முறைப்பாடுகள் கிடைத்திருந்ததுடன் அவற்றில் 312 முறைப்பாடுகள் தீர்வு செய்யப்படாதிருந்தமையால் பிரதேச மக்களின் முறைப்பாட்டுக்கான பொறுப்பேற்றல் பலவீன மட்டத்தில் காணப்பட்டதாக அவதானிக்கப்பட்டது. | கடந்த ஆண்டில் காணப்பட்ட கொவிட் நிலைமையின் கீழ் முறையாக நாளாந்த கடமைகளை நிறைவேற்ற முடியாதிருந்தது. வாடிக்கையாளரின் ஒத்துழைப்புடன் தற்போது எஞ்சிய முறைப்பாடுகள் தேவைப்பாட்டின் அடிப்படையில் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பிரதேசத்தில் வசிக்கும் மக்களின் முறைப்பாடுகளுக்காக பொறுப்பேற்றல் சபையின் சட்டபூர்வமான பொறுப்பொன்றாக நிறைவேற்றப்பட வேண்டும். |

### 3.2 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாட்டிலான ஆதங்கள், பொறிகள் மற்றும் உபாகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபை அதிகாரத்தின் வீதிகள் காபட் இடுவதற்காக 2017 ஒக்டோபர் 20 ஆம் திகதி ரூபா 66,612,046 செலவினம் மேற்கொண்டு கொள்வனவு செய்யப்பட்ட 06 இயந்திர அலகுகளில் ரூபா 53,351,000 பெறுமதியான 04 இயந்திரங்கள் எவ்வித பயன்பாட்டுக்கும் பயன்படாமல் அத்துருகிரிய உப அலுவலக வளவில் விளைவற்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | கருத்து தெரிவித்திருக்க வில்லை | சபையின் சொத்துக்கள் செயற்திறனான நடவடிக்கைகளில் ஈடுபடுத்த வேண்டும். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஊழியர் வெற்றிடங்களும் மிகையும் | | |
| (i) | சபையின் உயர்மட்ட முகாமைத்துவத்துக்காக 08 பதவிநிலைத்தர உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் 12 வருமான பரிசோதகர் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதும் அதில் 09 பதவிகள் வெற்றிடங்களாகக் காணப்பட்டன. | பதிவு நிலை உத்தியோகத்தர் வெற்றிடங்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நிரப்பப்பட வேண்டும். அவ்வெற்றிடங்கள் தொடர்பாக மாதாந்த அறிக்கை மற்றும் காலாண்டு அறிக்கை மூலம் குறித்த நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளன அத்தோடு 2020.02.21 ஆம் திகதி முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை 1/2020 இன் மூலம் ஆரம்ப சேவை வகுதியிலான நிறுவனமயப்படுத்தப்பட்ட நியமனங்களுக்காக ஆட்சேர்ப்பு இடைநிறுத்தப்பட்டுள்ளதால் இவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியாதிருந்தது. வருமானப் பரிசோதகர் ஆட்சேர்ப்பது தொடர்பாக வழக்கொன்று விசாரிக்கப்பட்டு வருவதால் உள்ளூராட்சிமன்ற ஆணையாளரின் LGD/02/21/5/5 தொகுதி மற்றும் 2016.05.12 ஆம் திகதி கடிதத்தின் மூலம் மீண்டும் அறியத் தரும் வரை வருமானப் பரிசோதகர் ஆட்சேர்ப்பது இடைநிறுத்தப்பட்டுள்ளதால் இவ் வருமானப் பரிசோதகர் பதவிகள் வெற்றிடங்களாக இப்பதவிகளை நிரப்புவதற்கு முடியாது இருந்தது. | இவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ii) | சபைக்காக சட்ட உத்தியோகத்தர் ஒருவர் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதும் உள்ளவாறாக 02 சட்ட உத்தியோகத்தர்களின் சேவை பெறப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டின் நீதிமன்றத்தில் தோன்றுவதற்குரிய சட்ட செலவினமாக ரூபா 856,000 தொகை வெளித்தரப்பினருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே 11 அபிவிருத்தி உத்தியோகத்தரகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதும் உள்ளவாறாக 19 பேர் சேவையில் ஈடுபடுத்தப்படடிருந்தனர். அதன் பிரகாரம் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் 08 பதவிகள் மிகையாக இருந்தன. | சபையில் சட்ட உத்தியோகத்தரின் சேவையில் ஈடுபட்டிருக்கும் போது பிரதான செயலாளரின் CSWP/PTR/F1/11 மற்றும் 2021.01.21 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் மற்றுமொரு . உத்தியோகத்தர் இடம்மாற்றம் செய்யப்பட்டிருந்தார். இது தொடர்பாக மாநகர ஆணையாளரின் KMC/2/1/2/45 மற்றும் 2022 பெப்ரவரி 21 ஆம் திகதி கடிதத்தின் மூலம் உள்ளூராட்சிமன்ற ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அத்தோடு அங்கீகரிக்கப்பட்ட | சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் பிரகாரம் ஊழியர்களை சேவைக்கு இணைக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பதவிகளின் பிரகாரம் 11 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபட்டிருக்கும் போது மேலும் 08 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சபைக்கு இணைக்கப்படடிருந்தனர். உள்ளூராட்சிமன்ற ஆணையாளரின் LGD/2 பட்டதாரிப் பயிலுனர்கள் மற்றும் 2021.10.15 ஆம் திகதி கடிதத்தின் பிரகாரம் 18 புதிய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நியாயப்படுத்தும் அறிக்கை மற்றும் நி.பி 71 வடிவத்தின் பிரகாரம் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்டு உள்ளூராட்சிமன்ற ஆணையாளருக்கு (மே.மா) அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | |
| (iii) | சபைக்காக முறையான வகையில் அங்கீகரிக்கப்படாத வெளிக்கள தொழிலாளர்களாக 63 பேர் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். அத்துடன் இவ் ஆட்சேர்ப்பு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்கு உள்ளீர்க்கப்பட்டிருக்கவில்லை. | பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 29/2019 ஆம் இலக்க பிரகாரம் 25/2014 மற்றும் 25/2014 (i) இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட தகைமைகள் தொடர்பாக நேர்முகப் பரீட்சையொன்று நடாத்தி அப் பெறுபேறுகளின் பிரகாரம் இந்த ஆட்சேர்ப்பு இடம்பெற்றிருந்தது. | ஆட்சேர்ப்பு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | ஊழியர் கடன்<br>------------------------<br>2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 87,963,943 ஆக இருந்ததுடன் அதில் இடமாற்றம் பெற்றுச் சென்ற 1 முதல் 3 ஆண்டுகளுக்கு இடைப்பட்டிருந்த அறவிடப்பட வேண்டிய கடன் மீதி ரூபா 853,963 ஆகவும் 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதி ரூபா 32,955 தொகையும் என மொத்தம் ரூபா 886,918 ஆன மீதிகள் காணப்பட்டன. மேலும் 03 வருடங்களுக்கு மேற்பட்ட ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன்மீதி ரூபா 358,922 ஆக இருந்ததுடன் வேலையை விட்டுச்சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கடன் மீதி ரூபா 983,200 ஆக இருந்தது. அதன் பிரகாரம் மொத்தம் ரூபா 1,342,122 தொகை 2022 ஏப்ரல் கணக்காய்வு திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை கடன் மீதிகளை அறவிடுவது தொடர்பாக சட்ட உத்தியோகத்தருக்கு சட்ட ஆலோசனைகளை பெற கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. | அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் மீதிகளைசபைக்கு நட்டம் ஏற்படாத வகையில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |